## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.91/2021

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 15 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr-III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 15.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. ராணி (PW-1) | வயது | : | 49/2025 |
| க/த பெயர் | : | திரு. ராஜா | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | ஆலங்கோட்டை | வட்டம் | | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் படித்து பார்த்து தான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். தாவா சொத்தை எனது மாமனார் மாயகிருஷ்ணன் கிரய ஒப்பந்ததாரர் என்ற அடிப்படையில் அனுபவம் செய்து வந்தாரோ அதே அடிப்படையில் தான் நானும் அனுபவம் செய்து வருவதாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். இன்றைய தேதிவரை தாவா சொத்தினை எனது பெயருக்கோ அல்லது எனது மாமனார் பெயருக்கோ கிரயம் செய்து தர வேண்டுமென பிரதிவாதிக்கோ அல்லது அவரது பெற்றோருக்கோ சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். எப்போது அனுப்பினேன் என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை, 2006 ல் அனுப்பினேன்.

2. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணமான சட்ட அறிவிப்பில் கடந்த 1987 ம் வருடத்தில் கிரயம் செய்ததாக ஒப்புக்கொண்டு அதற்காக ஒரு கிரய ஒப்பந்தத்திலும் எனது கட்சிக்காரருக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணமான சட்ட அறிவிப்பில் தாவா சொத்தினை ஆக்கிரமித்து அனுபவம் செய்து வருகிறோம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லியுள்ளோம். எந்த இடத்தில் சொல்லியுள்ளேன் என்றால் 3 வது பாராவில் சொல்லப்பட்டுள்ளது.

3. வா.சா.ஆ.5 ஆவணமான சட்ட அறிவிப்பில் பாரா 3 ல் அத்துமீறி ஆக்கிரமித்து வைத்துள்ளதாக சொல்லியுள்ளது முற்றிலும் கற்பனையானது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.3 ஆவணமான இந்நீதிமன்ற அசல் வழக்கு எண். 64/2020 வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் பாரா 8 ல் வாய்மொழி கிரயம் ஏற்பட்டு அதன் அடிப்படையில் சுவாதீனம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.5 ஆவணமான சட்ட அறிவிப்பில் உள்ள விபரங்களை வழக்கறிஞருக்கு நான் சொல்லியதன் பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் எனது குடும்பத்தில் பாகச்சீட்டு ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்திற்கு பின்னர் பின்னிட்டு யோசனை அடிப்படையில் வா.சா.ஆ.1 ஆவணத்தை மோசடியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தை யார் எழுதியது அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் நான் தான் எழுதினேன், எனது வழக்கறிஞரிடம் சொல்லி எழுதினேன். அதிலுள்ள விபரங்களை எனது வழக்கறிஞர் சொல்லியதா என்றால் நான் தான் சொன்னேன். எந்த வருடம் வழக்கறிஞரிடம் சொல்லியது என்றால் 2020 க்கு பிறகு சொல்லியது.

6. வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதும்போது நானும் எனது வழக்கறிஞரும் இருந்தோமா என்றால் ஆமாம். வேறு யார் இருந்தார் என்றால் வேறு யாரும் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணமானது சட்டத்தால் ஏற்புடைய ஆவணம் இல்லை என்றும் குறியீடு செய்ய இயலாத ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உரிய முத்திரை வில்லையும் இல்லை, பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் சட்டத்தால் ஏற்புடைய ஆவணம் இல்லை என்றும் குறியீடு செய்ய இயலாத ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமானது வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

7. வழக்குரையில் பாரா 2 ல் வாய்மொழியாக கிரய ஒப்பந்தம் ஏற்பாடு செய்து கொண்டோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து ராஜேஷ் அப்பா கலியபெருமாள் பெயரில் இருந்தது என்றால் சரிதான். கலியபெருமாள் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்தை பிரதிவாதியானவர் அவரது தந்தை கலியபெருமாளை ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டார் என்பது தான் எனது கட்சி என்றால் சரிதான். கலியபெருமாளுக்கு பிறகு தாவா சொத்திற்கான பட்டா, சிட்டா போன்ற ஆவணங்கள் பிரதிவாதி ராஜேஷ் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

8. தாவா சொத்தானது 2006 ல் எனது கணவரின் அனுபவத்திற்கு வந்து விட்டதாக கட்சி செய்வதால் தாவா சொத்தானது எனது கணவரின் அனுபவத்திற்கு வந்துவிட்டதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரை உள்ள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றாவது தாவா சொத்தினை 2006 லிருந்து இந்நாள் வரை அனுபவம் செய்து வருவதற்கான ஆவணமாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை, அனுபவம் மட்டும் தான் உள்ளது ஆவணங்கள் எதுவும் இல்லை.

9. தாவா சொத்தானது எனது அனுபவத்தில் இருப்பதற்கான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணமான புகைப்படமானது எந்த தேதி எந்த வருடம் எடுக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை, வழக்கிற்கு பின்பு எடுக்கப்பட்ட புகைப்படம்.

10. தாவா சொத்துக்கள் பிரதிவாதியின் தகப்பனாருக்கு அனுபவம் இருந்து வந்து தற்போது பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வந்து, நான் தற்போது வழக்கிற்காக தாவா சொத்து நான் ஆக்கிரமித்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. 2018 ம் வருடம் தாவா சொத்து குறித்து ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய சொல்வதற்கு எனக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையான உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல, உண்மையான உரிமையாளர் நான் தான்.

12. தாவா சொத்தினை கலியபெருமாளிடம் கிரயம் கேட்டு அவரும் செய்து தராததால், பிரதிவாதி ராஜேஷிடம் கேட்டும் அவரும் கிரயம் செய்து தரவில்லை என்பது தான் எனது கட்சி என்றால் சரிதான். எனது மாமனார் தாவா சொத்து குறித்து கிரய ஒப்பந்தம் எற்பட்டதாகும் அதனை தொடர்ந்து எனது மாமனாருக்கு எனது கணவர் அனுபவம் செய்து வந்ததாகவும் நான் சொல்லிய விபரங்கள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல.

13. தாவா சொத்தின் அனுபவம் குறித்து எந்த வித ஆவணத்தையும் முன்னிலைப்படுத்தாமல் எதிரிடை அனுபவம் கோர இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

14. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3, வா.சா.ஆ.5 மற்றும் வழக்குரை ஆகியவற்றில் முன்னுக்குப்பின் முரணான சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் உண்மையான விபரங்களை தெரிவிக்காமல் பொய்யான விபரங்களை கொண்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. நான் கோருகின்ற எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.15 17:18:42 +0530

District Munsif

Mannargudi.